பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 21 (3—5—68) வெள்ளி ★ வெளியூர்: சித்திரை 22 (4—5—68) சனி [இதழ்: 267

உயர் நீதிமன்றத்தில் தீரா வழக்குகள்!

புதுடில்லி, மே 3—

இந்தியாவில் உள்ள 16 உயர் நீதிமன்றங்களிலுமாக 1967-ம் ஆண்டு இறுதி வரை மொத்தம் 3,34,529 வழக்குகள் தீர்வடையாமல் இருந்தன.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் தான் தீர்வடையாத வழக்குகள் மிகவும் அதிகமாக (63,602) இருந்தன.

மற்ற உயர் நீதிமன்றங்களில் தீர்வு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை வருமாறு:—

கல்கத்தா 54,501; தமிழ்நாடு 34,112; பம்பாய் 30,267; கேரளம் 26,168; ஆந்திரம் 25,429; டில்லி 15,591.

அமெரிக்கா--இந்தியா நல்லுறவு வளர்ந்தோங்க....

உண்மைத் தோற்றத்தை எடுத்துக் காட்ட வேண்டும்

இந்திய மாணவர்களிடை அண்ணா உருக்கமான உரை

மன்ஹாட்டன், கான்சாஸ், மே 3—

"கல்வி கற்றல், வேலை பார்ப்பதற்கு ஆயத்தம் செய்து கொள்வதோடுகூட, அமெரிக்காவில் இந்திய மாணவர்களுக்குள்ள ஒரு பெரும் கடமை, இந்தியாவின் உண்மையான 'பண்புத் தோற்றத்தை' அப்படியே எடுத்துக்காட்டுவதாகும்.

"இந்தியாவின் வெற்றி - தோல்விகளையும், நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், பழமையான பண்பாட்டையும், மக்களுக்கு மேலான வாழ்க்கை நிலை வழங்க அது செய்துவரும் முயற்சிகளையும் உண்மையாகப் பிரதிபலிப்பதாக அந்தத் தோற்றம் இருக்க வேண்டும்.

"இந்தியாவின் சரியான தோற்றத்தை அமெரிக்கர்கள் அறிவது எட்டிப் முக்கியமோ அதுபோலவே, அமெரிக்கர்களின் சரியான தோற்றத்தை இந்தியர்கள் அறிவதும் முக்கியம்.

"திரைப்படங்களில் வருவதுபோன்று, எப்போதும் கையில் துப்பாக்கிகளுடன் திரிந்துகொண்டு சுடுவதற்கு யாரும் கிடைக்காவிட்டால் தம்மையே சுட்டுக் கொண்டு மடிந்து தொலையும் சூரர்கள் கொண்டதல்ல உண்மை அமெரிக்கா! அமெரிக்காவுக்கு ஓர் ஆன்மா உண்டு; தன் சொந்த மக்களுக்கு மேலான வாழ்க்கை தேடித்தந்துள்ள ஒரு நாடு—மக்கள் குலத்துக்கு உதவத் தனது வளங்களைப் பயன்படுத்தும் ஒரு நாடு!

"இந்தியாவும் - அமெரிக்காவும், ஒன்று மற்றொன்றைப் பற்றிச் சரியான கருத்துக்கள் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்; அப்படியானால்தான், அவை நட்புடனும் நல்லெண்ணத்துடனும் ஒத்துழைப்புடனும் வளர்ந்தோங்க முடியும்."

இவ்வாறு தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், கடந்த செவ்வாயன்று இங்கு இந்திய மாணவர் சங்கம் அளித்த வரவேற்பில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கினார்.

முன் ஆயத்தமின்றி ஆற்றிய உருக்கமிக்க உரை

தேநீர் விருந்திலும் வரவேற்பிலும் ஏராளமாக இந்திய மாணவர்களும், அமெரிக்க மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இந்தியா—அமெரிக்க உறவுகள் குறித்து முன் ஆயத்தமின்றி முதல்வர் நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவை மாணவர்களும், பேராசிரியர்களும் கேட்டனர்.

தாய்நாட்டின் ஏக்கத்தைத் தூண்டிவிட்டது!

90 மைல்களுக்கு அப்பால் கான்சாஸ் பல்கலைக் கழகத்தில் படித்துவரும் தமிழக மாணவர்கள், தம் தலைவரைப் பார்ப்பதற்கென்றே இங்கு வந்தனர்.

தேநீர் விருந்தில் அவர்கள் கலந்துகொண்டனர்; பின்பு, அண்ணா அவர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்று அவருடன் உரையாடினர்; படமெடுத்தனர்.

உலகத் தமிழ் மாநாட்டுப் படம் அவர்களுக்குத் தாய்நாட்டு ஏக்கத்தைத் தூண்டிவிட்டது. தேநீர் விருந்தில் படம் காட்டப்பெற்றது.

தமிழக மாணவர்கள் யார்?

அண்ணா அவர்களைச் சந்தித்த தமிழக மாணவர்கள் வருமாறு:—

கே. எல். செல்லப்பா—இரசாயனம் (சென்னை நகரம்); வி. சகர்—பூச்சியியல் (திண்டுக்கல்); ஆர். ஜம்புநாதன்—உயிரியல், இரசாயனம்; எஸ். என். பி. நாகராசன்—வேளாண்மைப் பொருளியல்; கே. ஜி. சங்கரன்—தொழில் துறைப் பொறியியல்; எஸ். மாதவன்—இரசாயனப பொறியியல் (அனைவரும் தமிழ்நாட்டவர்); பி. சேஷாத்திரிநாதன் — கதிரியக்க விஞ்ஞானம் (கோட்டயம்); பி. சம்பந்தம்—இரசாயன, உயிரியல் (நெய்வேலி)

சுதந்தரத்தை வலுப்படுத்த எவ்வாறு இயலும்?

மக்களின் மனப்பாங்கு பற்றி வி. வி. கிரி

ஜோத்பூர், மே 3—

"கொள்கையற்ற அரசியல்—வேலையற்ற செல்வம்—மனச்சாட்சி இல்லாத இன்பம்—நற்குணமற்ற அறிவு—ஒழுக்கமற்ற வர்த்தகம்—மனிதாபிமானமற்ற விஞ்ஞானம்—தியாகமற்ற வழிபாடு ஆகிய ஏழு பாவங்களையும் தவிர்க்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி கூறியுள்ளார்.

"சனநாயகம் மூலம் சுதந்தரத்தை வலுப்படுத்தும் பணியை இந்தியா நிறைவேற்ற இயலும்; ஆனால், சில மனித இலட்சியங்கள்—சில கொள்கைகள் — சில செயல் முறைகள் — மனப்போக்கு ஆகியவற்றைப் பொறுத்து இது இருக்கிறது"

என்று விழா ஒன்றில் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்

ஹாவாய் மரபுப்படி ஹானலூலுவில் அண்ணாவுக்கு வரவேற்பு

அன்புக்கும் நட்புக்கும் சின்னமாக வண்ண வண்ண மலர்மாலை அணிவிப்பு

அனைத்துலக சகோதரத்துவ உணர்வு நிலவும் தீவில் அறிஞர்களையும் மாணவர்களையும் அண்ணா சந்திக்கிறார்

ஹானலூலு, மே 2—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு, ஹாவாய் மரபுப்படியான சிறப்பு வரவேற்பு ஒன்று காத்திருக்கிறது.

ஹாவாய் தலைநகர் ஹானலூலுவுக்கு அவர் மே 4-ந்தேதி வருகிறார்.

'அலோஹா உணர்ச்சி' என்று கூறப்படும் மரபு, அன்புக்கும் நட்புக்கும் சின்னமாகும்.

வண்ண வண்ண மலர்கள் கொண்டு தொடுக்கப் பெற்ற மாபெரும் மலர் மாலை ஒன்று அண்ணாவுக்கு அளிக்கப்படும்.

ஹானலூலு நகரில் அண்ணாவின் முக்கிய அலுவல் கிழக்கு—மேற்கு நிலையத்தில் இருக்கிறது; அங்கு பல நாட்டு அறிஞர்களையும் மாணவர்களையும் அண்ணா அவர்கள் சந்திப்பார்.

கிழக்கு-மேற்கு நிலையத்தை, 'ஒரு வகைப் பல்கலைக்கழகம்' என்றே கூறலாம். இங்குதான் ஆசிய—பசிபிக் நாடுகளின் சிறந்த உள்ளங்கள், அமெரிக்க நாட்டுச்

(4-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணாவைக் கவனிக்கும் அயல்நாடுகள்!

"அண்ணாவைப் பார்க்க விரும்பும் இந்தியர்கள் அனைவருக்குமாகத் தம் சொந்தப் பொறுப்பில் இந்தியத் தூதுவர் ஜி. பார்த்தசாரதி பெரிய விருந்து ஒன்றினை ஏற்பாடு செய்திருக்கிறார்!

"கூப்பிய கரங்கள் ஒருமுகமாக அண்ணாவை வரவேற்கின்றன! இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட இந்தியர்கள் தனியாகவும், குடும்பத்துடனும் அங்கு வரிசையாக அண்ணாவுடன் கைகூப்புவதில்—கைகுலுக்குவதில் பெருமை கொள்கின்றனர்!

"போலிஷ் தூதுவர், பர்மியத் தூதுவர், இரஷ்யத் தூதுவர், சிங்கப்பூர்–சிலோன்–மலேசியா–பிரான்ஸ் தூதுவர்கள் அனைவரும் அண்ணாதுரையைக் காணவருகின்றனர்! மற்றும் பற்பல அமெரிக்கர்கள்!

"சிலோன் தூதுவர் அமரசிங்கா, மண்டபம் காம்ப் பற்றியும் கச்சத் தீவு பற்றியும் அண்ணாவோடு ஏதோ கூறுகிறார்! அண்ணாவின் பதிலும் தொடர்ந்து சிரிப்பொலியும்தான் கேட்கிறது!

"அண்ணாதுரையுடன் சேர்ந்து நிற்கவும் பேசவும் ஆசைப்படும் இத்தகைய கூட்டத்தை 'இந்தியா ஹவுஸ்' இதுவரை கண்டதில்லை" என்கிறார் ஒரு வடக்கத்திக்காரர்!

"உங்களுக்கு அண்ணாதுரையைப் பற்றி என்ன தெரியும்?" என்கிறேன் பர்மியத் தூதுவரைப் பார்த்து; 'அவர் சென்னையின் ஹீரோ அல்லவா? சென்னையின் அரசியலைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறோம்' என்று கூறி நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார் அவர்!"

'அண்ணா, அண்ணா' என்ற வார்த்தை தமிழர் இருக்குமிடமெல்லாம் எதிரொலித்தது!

"'அண்ணாதுரை, அண்ணாதுரை' என்ற வார்த்தைகள், ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமெரிக்காவில்--தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் எதிரொலித்தது. கலிபோர்னியாவிலிருந்து நியூயார்க் வரை—டெக்காசிலிருந்து மில்வாக்கிவரை—தமிழர்களில் பலர் ஒருவருக்கொருவர் போன் மூலம் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"'நயாகராவுக்கு வருகிறாராமே—போய்வரலாமா?'—'அவருக்கு நம்மைப் பார்க்க நேரமிருக்குமா'—'ஏன், சிகாகோவுக்கு அண்ணாதுரை வரவில்லை?'—'அவரது விஜய நிகழ்ச்சிகளைத் தாருங்கள்' என்று வாஷிங்டனைக் கூப்பிட்டு கேட்கிறார், ஒரு மில்வாக்கிக்காரர்!

"'பாரதி சங்கத்தில் பேசுவாரா? ஏற்பாடு செய்ய முடியுமா?'—என்று நியூயார்க் தமிழர்களுக்குக் கவலை!

"'எங்கள் கம்பெனி பிரசிடெண்ட், அவருடன் தொழில் விஷயமாகப் பேசவிரும்புகிறார்'—என்று சில இந்தியர்களின் வேண்டுகோள்கள்.

"ஏன், அவ்வளவு பேர் அவரைப் பார்க்க ஆசைப்பட வேண்டும்? என்ன, அப்படியொரு கவர்ச்சி அண்ணாதுரையிடம்?

"'கல்கி' என்ற வசிஷ்டர் வாயால், 'பெர்னாட் ஷா' என்று புகழப்பட்டவரை—ஒரு பத்திரிகாசிரியரை—சீர்திருத்தவாதியை—தலைசிறந்த பேச்சாளரை—தமிழர்கள் எங்கு சென்றாலென்ன--அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியுமா?

"அமெரிக்கத் தமிழர்களிடையே, 'ஏதோ, தங்கள் மிக நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் வருகிறார்' என்பது போன்ற உணர்ச்சி இருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை!"

நியூயார்க் விமான நிலையத்தில் மக்களிடை காணப்பட்ட பரபரப்பு!

"நியூயார்க் நகர ஜான் எப். கென்னடி விமான நிலையத்தை வலம்வந்த வண்ணம், பாரிசிலிருந்து வரும் டி. டபிள்யூ. ஏ. விமானம் வந்து இறங்குகிறது; மணி 1-15; 2-15-க்கு வர வேண்டிய விமானம், ஒரு மணி முன்னதாகவே வந்துவிட்டது பலரை ஏமாற்றிவிட்டு!

"எனினும், திரளான இந்தியர்கள் விமான நிலையத்தில் அங்குமிங்கும் சென்றுகொண்டும் பேசிக்கொண்டும் நிற்கிறார்கள்! 'வந்துவிட்டது—வந்துவிட்டது' என்ற குரல்கள்! வரும் வழியை நோக்கி ஓட்டம்! பெண்கள் பலர்! குடும்பங்களுடன் சிலர்! அதோ—ஐ. நா. தூதுவர் திரு. பார்த்தசாரதி, தமக்கே உரிய இனிய புன்முறுவலைத் தவழவிட்ட வண்ணம் நின்றுகொண்டிருக்கிறார்! இந்தியாவின் நியூயார்க் பிரதிநிதி டாக்டர் குப்தா நின்றுகொண்டிருக்கிறார்! பற்பல அதிகாரிகள்—பேரா

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 21 (3—5—68) வெள்ளி

காமராசர் பொறுப்புள்ளவராக இருந்தால்!

[2]

சில நாட்களுக்கு முன்னர், ஜெயங்கொண்டத்தில் காங்கிரசு மாநாடு நடைபெற்றதாம். அவ்வூரிலிருக்கின்ற ஒரு தேநீர்க் கடைக்கு ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன், காலில் பாதரட்சை அணிந்துகொண்டு போனாராம். அதைக் கண்ட அந்தத் தேநீர்க் கடைக்காரர், அந்தத் தாழ்த்தப்பட்ட குடிமகனிடம்,

“இப்படி செருப்புப் போட்டு வரக்கூடாது; உங்கள் ஆட்சி போச்சு; இப்பொழுது வேறு ஆட்சி நடக்கிறது; ஆகவே இப்படி வராதே”

என்று கூறினாராம்.

இந்தக் கற்பனை நிகழ்ச்சியைக் கூறிவிட்டு—இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு—கழக ஆட்சியைக் களங்கப்படுத்தவும், காங்கிரசு ஆட்சிக்கு உயர்வு தேடவும் காமராசர் முயன்றிருக்கிறார்.

“மக்கள் மனத்தில் இப்படி ஓர் எண்ணம் வளர்ந்துவிட்டது; தாழ்த்தப்பட்டவர்கள் ஆட்சி போய்விட்டது; ‘அவர்களை அடக்கவேண்டும்’ என்ற எண்ணம் ஏன் வந்தது? அப்படிப்பட்ட எண்ணத்தை உண்டாக்கிவிட்டுவிட்டார்கள்”

எனக் கூறி, காங்கிரசு ஆட்சிக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பை, காங்கிரசு ஆட்சிக்கு இருந்துவந்திருப்பதாக நிலைநாட்டப் பார்த்திருக்கின்றார் காமராசர்!

காங்கிரசு ஆட்சியில், ‘தாழ்த்தப்பட்ட மக்கள்’ என அழைக்கப்பட்டு வரப்படுகின்ற அரிசன மக்கள் எப்படி நடத்தப்பட்டு வந்துள்ளனர் என்பதற்கு, முதலமைச்சராகக் காமராசர் இருந்த நேரத்தில்—முதுகுளத்தூரில் நடைபெற்ற கலவரத்தின்போது இமானுவல் என்ற அரிசனக் குடிமகன் பட்டப்பகலில் வெட்டிக் கொல்லப்பட்டதும், அதைக் காரணமாகக்கொண்டு இருபது நாட்களுக்குமேல் தொடர்ந்தாற்போல் அரிசன மக்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதும், அரிசனப் பெண்களில் சிலரோ, பலரோ மானபங்கம் செய்யப்பட்டதும் போதிய சான்றாகும்.

காங்கிரசு ஆட்சியில்—அதிலும் காமராசர் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு நடைபெற்ற காங்கிரசு ஆட்சியில்—அரிசனக் குடிமக்கள், மேலே எடுத்துக்காட்டியிருப்பதேபோல் கொடுமைக்கும் துன்பத்துக்கும் ஆளாகியிருக்கின்றபொழுது, யாரோ ஒரு தேநீர்க் கடைக்காரர், ‘பாதரட்சை அணிந்து வரக் கூடாது’ என ஓர் அரிசனக் குடிமகனைப் பார்த்துக் கூறினார் என்ற கற்பனைக் கதையைக் கூறி, ‘அரிசனங்களுக்குப் பாதுகாப்பாக இருந்துவந்த காங்கிரசு ஆட்சி போய்விட்டது—காங்கிரசு ஆட்சிதான் அரிசன ஆட்சி—அது இப்பொழுது இல்லை—இப்படிப்பட்ட எண்ணம் மக்கள் மனத்தில் இப்பொழுது தோன்றிவிட்டது’ எனக் காமராசர் கதைத்திருப்பது, ‘பொருந்தாப் பொய்க் கூற்று’ என்பதுடன், நகைப்புக்குரியதுமாகும்.

முதுகுளத்தூர் கலவரத்தின்பொழுது அரிசன மக்கள் அனுபவித்த துன்பத்தை, ஜெயங்கொண்டத்தில் ஒரு தேநீர்க் கடைக்காரர், ‘செருப்பு அணிந்துவரக் கூடாது’ எனக் கூறியதால் ஓர் அரிசனக் குடிமகனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய துன்பத்துடன் ஒப்பவைத்துப் பார்க்கின்றபொழுது, சராசரி அறிவுபடைத்திருக்கின்றவர்கூட வெட்கப்படுவார்—‘தம்மை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசு ஆட்சியில் பயங்கரமான கொடுமைகளுக்கு அரிசன மக்களை உள்ளாக்கி விட்டுவிட்ட காமராசர் அவர்களா, ஜெயங்கொண்டம் கற்பனைக் கதையைக் கூறி கழக ஆட்சியைப் பழிப்பது’ என்று!

காமராசர் ஏற்கனவே கூறியிருப்பதுபோல், ‘காங்கிரசு ஆட்சி தாழ்த்தப்பட்டவர்கள் ஆட்சி’ என்பதில் கடுகளவாவது உண்மை இருந்திடும்பட்சத்தில், காங்கிரசு ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஆந்திர மாநிலத்தில், அரிசனச் சிறுவன் ஒருவன் எரித்துக் கொல்லப்பட்டிருப்பதும், வேறு ஒரு சிற்றூரில் பழங்குடியைச் சேர்ந்த சில பெண்கள் நிர்வாணமாகத் தெருக்களில் நடத்திச் செல்லப்பட்டிருப்பதும் நடைபெற்றிருக்க முடியுமா?

இந்த இரண்டு கொடுமைமிக்க நிகழ்ச்சிகளும், தனி நிகழ்ச்சிகளாகும். யாரோ சில சாதித் திமிர் பிடித்த—மனித உருவில் உள்ள மாமிசப் பிண்டங்களால் இழைக்கப்பட்டிருக்கின்ற அக்கிரமச் செயல்களாகும். இதைப் பொது நிகழ்ச்சிகளாக்கி, ‘ஆந்திர மாநகரம் முழுவதிலும் இப்படிப்பட்ட கொடுமைகள்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யப்பட்டு வருகின்றன’ என நாம் கொள்ளவும் தயாராக இல்லை—கூறவும் தயாராக இல்லை; பிறர் கூறின், அக்கூற்றை நாம் நம்பவும் தயாராக இல்லை.

‘செருப்புப் போட்டுக்கொண்டு தேநீர்க் கடைக்குள் வராதே’ என்று ஜெயங்கொண்டம் தேநீர்க் கடைக்காரன் ஒருவன் கூறினான் எனப் பெருந் தலைவர் காமராசர் அவர்கள் கூறியுள்ளாரே—அக்கற்பனையை, உண்மையிலேயே நடைபெற்றுள்ள நிகழ்ச்சி என வாதத்திற்காக ஒப்புக்கொள்ளுகிறோம்.

இந்தக் கற்பனைக் கதையை வைத்துக்கொண்டு, ‘தாழ்த்தப்பட்டவர் ஆட்சி—காங்கிரசு ஆட்சி’ என்ற கருத்தை நிலைநாட்டப் பார்க்கின்ற அதே நேரத்தில், ‘கழக ஆட்சி—தாழ்த்தப்பட்டவர்களைக் கொடுமைப்படுத்தும் ஆட்சி’ என்ற நச்சுக் கருத்தையும் விதைக்கப் பார்க்கின்ற காமராசர் அவர்களை, ஆந்திர அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்துவருகின்ற திம்மா ரெட்டியார்,

‘அரிசனங்கள் உதைக்கப்பட வேண்டியவர்கள்’

எனக் கூறினார்—என, அக்கூற்றுக்கு எதிராக அனைத்திந்திய மட்டத்தில் கிளம்பியுள்ள பெரும் புயலுக்கு விளக்கம் தரக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

‘நான் அப்படிக் கூறியது கிடையாது’ என, ஆந்திர அமைச்சர் திம்மா ரெட்டியார் மறுத்துக் கூறலாம்—கூறுகின்றார். ஆனால், மத்திய அமைச்சர் சஞ்சீவையா அவர்களிடம்,

‘அந்தப் பயல் அப்படியெல்லாம் சொல்லுவதுண்டு’

எனக் காமராசர் தம் முன்னிலையில் கூறியதாக சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சிரீதரன், மக்களவையில் அறிவித்திருக்கின்றார்.

ஜெயங்கொண்டம் தேநீர்க் கடைக்காரர் சொன்னதாக ஒரு கட்டுக் கதையைக் கூறி, கழக ஆட்சியை, ‘பழங்குடி மக்களுக்குப் பகையான ஆட்சி’ எனக் கூறுவதற்குக் காமராசர் துணிந்திருப்பதுபோல்—அமைச்சர் திம்மா ரெட்டியின் கூற்றை வைத்துக்கொண்டு—காங்கிரசு ஆட்சியை, ‘பழங்குடி மக்களின் பெரும் பகை ஆட்சி’ என நாமும் கூறத் துணியலாம்.

தேநீர்க் கடைக்காரர் மிக மிகச் சாமானியர். அந்தச் சாமானிய மனிதரின் சிறு செயலைக் கண்டு கழக ஆட்சியின்மீது பழங்குடி மக்களுக்கு ஆத்திரம் வரப்போவதில்லை. காமராசர் கனவு காண்பதுபோல், கழக ஆட்சியின்மீது அம்மக்களுக்குப் பகை உணர்வு வரவும் வராது.

ஆனால், ஜெயங்கொண்டம் தேநீர்க் கடைக்காரரைவிட—‘அமைச்சர்’ என்ற பொறுப்புள்ள பதவியின் காரணத்தால்—ஆந்திர அமைச்சரின் செயல், காங்கிரசு ஆட்சிக்குக் களங்கத்தைத் தேடித் தரக்கூடியது! காங்கிரசுக் கட்சியின்மீதும் ஆட்சியின்மீதும் பழங்குடி மக்களின் கடுங்கோபத்தைக் கிளப்பிவிடக் கூடியது—அமைச்சரின் நடத்தை!

காமராசர் பொறுப்புள்ளவராக இருந்தால், இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை உணர்ந்துகொள்ள வேண்டும்.

—கா. க.

‘அதிகாரமிருக்கிறது’ என்பதால் அவசர முடிவு செய்ய வேண்டாம்

சட்டமியற்றுவதன் பலனை நாமே அனுபவிப்பதா?

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம்—படி உயர்வு கோருவது முறையல்ல!

காங்கிரசு உறுப்பினரின் மசோதாவை எதிர்த்து கழக உறுப்பினர் இரா. செழியன் பேச்சு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகப்படியான படி—பென்ஷன்—இலவச இரயில்வே ‘பாஸ்’கள் ஆகியவைகளை அனுமதிக்குமாறு கேட்டுக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. பருபால் என்பவர் கொண்டுவந்த தனி நபர் மசோதாவை எதிர்த்துக் கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் பேசியதாவது:—

முற்றிலும் தவறான ஒன்று!

“முதலாவதாக, ஒரு தவறான கருத்து பரப்பப்பட்டிருப்பதை விளக்க விரும்புகிறேன்.

காங்கிரசுக் கட்சியினர் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்துக்கும்—அதில் கேட்கப்படும் எல்லாவற்றிற்கும் இங்குள்ள மற்ற எல்லா எதிர்க்கட்சிகளும் ஒத்துக்கொண்டு விட்டதுபோல் இங்கு சிலரால் தெரிவிக்கப்பட்டது; பத்திரிகைகளில் கூட இதுபோன்ற விவரம் தரப்பட்டுளளது.

இது முற்றிலும் தவறான ஒன்று. மற்றக் கட்சிகளின் நிலைமைகளை ஆந்தந்தக் கட்சியினர் கூறுவார்கள். தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில், நான் கூறுகிறேன்—‘எங்களுக்கு இந்த மசோதா உடன்பாடானதல்ல’ என்று.

ஏற்றுக்கொள்வதற்கு எங்களால் இயலாது!

இந்தத் தனி நபர் மசோதாவை ஒட்டிப் பலவித யோசனைகள்—பலதரப்பட்டவர்களால் தரப்பட்டுள்ளன; எங்களிடமும் இதுபற்றிக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் பேசினார்கள்.

‘நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளத்தை ரூ. 500-லிருந்து ரூ. 750-க்கு உயர்த்த வேண்டும்’ என்று சிலர் கூறினர்கள்; நாள் படியை ரூ. 50 ஆகச் செய்ய வேண்டும்’ என்றும் சொல்லப்பட்டது

பென்ஷன், குடும்பத்தினர் பயணம் செய்ய—6-பேர்வரை—இலவச இரயில்வே ‘பாஸ்’கள் ஆகியவை பற்றியும் யோசனைகள் தரப்பட்டுளள.

‘இந்த ஆலோசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்’ என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம்.

முக்கியக் கட்சிகளின் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் கலந்து ஆலோசித்தபொழுது, தி. மு. கழக உறுப்பினர் திரு. கந்தப்பன் அதில் பங்கு பெற்றிருந்தார். மற்றக் கட்சியினர் தந்த யோசனைகளின்மீது எங்களது கருத்தை அவர்மூலம் நாங்கள் தெரிவித்துள்ளோம்.

‘பத்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வெளிவந்தவர்களுக்குப் பென்ஷனாக ரூ. 250 தரவேண்டும்’ என்பது போன்ற யோசனைகள், சரியானவையல்ல; ‘நாங்கள், அந்த யோசனைகளை ஒத்துக் கொள்ளமாட்டோம்’ என்று முன்கூட்டித் தெரிவித்துள்ளோம்.

நமக்கு நாமே சம்பள உயர்வு—அதிகமான படி—பென்ஷன்—என்று போட்டுக்கொள்வது சரியல்ல. நாங்கள் இதை முன்கூட்டித் தெரிவித்துள்ளோம்.

தெளிவான முடிவு ஒன்றும் இல்லையே!

மசோதாவைக் கொண்டுவந்தவருக்கோ, அதை ஆதரிப்பவர்களுக்கோ தெளிவாக எந்த முடிவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த மசோதாவை, ‘கூட்டுக் குழுவிடம் விடலாம்’ என்று மற்றொருவர் கூறுகிறார்.

ஒரு மசோதாவை விதிமுறைக் குழுவிடம்விடுவது என்பது, இதுவரை நடைபெறாத ஒன்று. அதற்கென்று நியமிக்கப்படும் ஒரு குழுவால் அதைப் பரிசிலனை செய்ய முடியுமே தவிர, வேறு எந்த அமைப்பாலும் அதைச் செய்ய முடியாது.

வசதிகள் பற்றி ஆராய்வது அவசியம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்ல முறையில்—திறம்படப் பணியாற்றச் சில உதவிகளையும், வசதிகளையும் செய்ய வேண்டியது அவசியம். ஆனால், சம்பள உயர்வு—படி உயர்வு—குடும்பத்துக்கு இலவசப் பயணம் என்று கேட்கவேண்டாம்.

டெலிபோன் வசதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அன்றாட வேலைகளுக்கு உதவியாளர் வசதி போன்றவைகளை நாங்கள் ஆதரிக்கிறோம்; ஆனால் இந்த வசதிகளை எப்படித் தரவேண்டும்—‘ஒவ்வொருவருக்கும் ஓர் உதவியாளரா, அல்லது சில உதவியாளரை நியமித்துப் பலருக்கும் உதவ வகை செய்வதா’—என்பன போன்றவை, ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

குழு ஆராயட்டும்!

‘எல்லாக் கட்சிகளும் உள்ளிட்ட ஒரு குழுவை அதிகாரபூர்வமாக நியமித்து, அதன் ஆலோசனைக்கு இந்தக் கருத்துக்களை முன் வைக்கலாம்’ என்று அவைத் தலைவர் கூறியதை, நான் வரவேற்கிறேன்.

‘சட்டமியற்றும் அதிகாரமிருக்கிறது’ எனறு அவசர அவசரமாகச் சில தீர்மானங்களையும் திருத்தங்களையும் கொண்டுவந்து—நாமே நிறைவேற்றி—நாமே அதன் பலன்களை உடனடியாக—மே 11-ம் நாள் இந்தத் தொடர் கூட்டம் கலைவதற்கு முன்னதாக அடைந்துவிட வேண்டும் என்று நினைப்பது தவறு.

கடைசியாகச் சொல்கிறேன்—மாதச் சம்பள உயர்வு—நாள் படி ரூ 50—குடும்பம் முழுவதற்கும் இலவச இரயில் பயணம்—பென்ஷன்—இவற்றையெல்லாம் நாங்கள் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. திறம்படப் பணியாற்ற மேற்கொண்டு என்ன வசதிகள் தேவை என்பதை, அவைத் தலைவரால் நியமிக்கும் குழு ஆராயட்டும்; அதில் நாங்கள் கலந்துகொண்டு எங்கள் கருத்துக்களைத் தருகிறோம்.”

கூட்டுக் குழு நியமனம்

புதுடில்லி, மே 1—

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம்—படி ஆகியவைகள் பற்றி ஆராய்வதற்கு உறுப்பினர்கள் கொண்ட கூட்டுக் குழு ஒன்றை, மக்களவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி நியமித்துள்ளார்.

நீர்ப் பாசனத்துக்கு ரூ. 40 கோடி!

பெங்களூர், மே 3—

அடுத்த ஆண்டிலிருந்து, மாநிலத்தின் மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை நீர்ப்பாசனத் திட்டங்களுககாக ஒதுக்குவதென கருநாடக அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவினல், நீர்ப்பாசனத்துக்கு ஒதுக்கப்படும் தொகை ஆண்டுக்கு ரூ. 35 கோடியிலிருந்து ரூ. 40 கோடியாக உயரும்.

இவ்வாண்டு சுமார் ரூ. 9 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; இதனை ரூ. 20 கோடியாக அதிகரிப்பது பற்றி ஆலோசிக்கப்படுகிறது.

சென்னைப் பகுதி

தி. மு. க. செயலாளர்களுக்கு அறிவிப்பு

"மே திங்கள் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் கிளைக் கழகத் தேர்தலுக்குரிய ஆணையாளர்களைத் தேர்ந்தெடுத்து, 5—8—68-க்குள் மாவட்டக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றேன்.

"அத்துடன், அந்தந்த வட்டங்களில் தேர்தலை நடத்துதற்குரிய இடங்களையும்—சம்பந்தப்பட்ட கிளைச் செயலாளர்களைக் கலந்து--மாவட்டத்திற்குத் தெரியப்படுத்த வேண்டுவதுடன், செயலாளர்கள் இல்லாத புதிய வட்டங்களில் யாராவது ஒரு பொறுப்பாளரை நியமித்து ஆவன செய்யவேண்டுகிறேன்.

"பெரும்பாலும், நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் மாவட்டப் பிரதிநிதியாகவோ, பொதுக்குழு உறுப்பினராகவோ--நன்கு பணியாற்றுபவராகப் பார்த்து--நியமிக்க வேண்டுகிறேன்."

நீலநாராயணன்
செயலாளர்,
சென்னை மாவட்ட தி.மு.க.

காரைக்குடி கழகத் தோழர்கட்கு:

"இதுநாள்வரையில் உறுப்பினர் உரிமைச் சீட்டு பெருத தோழர்கள், உடன் என்னிடத்தில் வந்து உரிமைச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்"

என்று காரைக்குடி நகரச் செயலாளர் சித. சிதம்பரம் அறிவிக்கிருர்.

மேலவைத் தேர்தல்

திண்டிவனம் வட்டச் செயலாளர் வேண்டுகோள்

"10—5—68-ல் நடைபெறவிருக்கும் தென்ஞற்காடு மாவட்ட உள்ளாட்சித் துறை மேலவைத் தேர்தலில், நமது கழக வேட்பாளராக மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம் நிறுத்தப்பட்டிருக்கிருர்.

"திண்டிவனம் வட்டத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களும், பேரூராட்சி மன்ற உறுப்பினர்களும், நகராட்சி மன்ற உறுப்பினர்களும் அன்பு கூர்ந்து தோழர் சாம்பசிவம் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

"கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், தோழர் சாம்பசிவம் வெற்றிவாகை சூடத் தீவிர முயற்சியில் ஈடுபட்டுப் பணியாற்ற வேண்டுகிறேன்"

என, திண்டிவனம் வட்டச் செயலாளர் ஆ. தங்கவேலு அறிவிக்கிருர்.

தமிழக அரசுச் செய்தித் தொகுப்பு தொடக்க விழா

தமிழகச் செய்தித் தொகுப்புத் தொடக்க விழா, 4—5—68 மாலை 6-30 மணிக்கு சென்னை—மவுண்ட் ரோடு பாலர் அரங்கில் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் செய்திப் பிரிவைத் தொடங்கி வைப்பார்; பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தமிழக அரசினர் திரைப் படக் கல்லூரியின் ஒத்துழைப்புடன் செய்தித் துறை உருவாக்கியுள்ள முதல் செய்தித் தொகுப்புத் திரைப் படச் சுருளை வெளியிடுவார்; செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்குவார்.

தலைநகரில் மே நாள் விழா

சிறப்பான ஊர்வலம் -- பொதுக்கூட்டம்

சென்னை, மே 2—

உலகப் பாட்டாளிகளின் திருநாளான மே முதல் நாள் (நேற்று) தமிழகமெங்கும், தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் இணைப்புக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு விழாவாகக் கொண்டாடப்பட்டது.

முக்கிய நகரங்களிலும், தொழிலாளர் மிகுந்துள்ள பகுதிகளிலும், கோலாகலமாக விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

ஆங்காங்கு நடைபெற்ற ஊர்வலங்களில், தோழமைக் கட்சித் தொழிலாளர்களும், ஆதரவாளர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பொதுக்கூட்டங்களில் தோழமைக் கட்சிகளின் முன்னணித் தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு விளக்க உரையாற்றியிருக்கின்றனர்.

தமிழக அமைச்சர்களும் ஆங்காங்கே விழாக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

சென்னையில் :

சென்னை நகரில், மாபெரும் ஊர்வலமும், கடற்கரையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

ஊர்வலத்தில் பல்வேறு கருத்துக்களைச் சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளுடன் ஏராளமான தொழிலாளத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

ஏராளமான சைக்கிள் ரிக்ஷாக்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

அனைத்துக் கட்சி இணைப்புக் குழுவின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு), வி.பி. சிந்தன் (இடது கம்யூனிஸ்டு), மாவட்ட தி.மு.க. செயலாளர் நீலநாராயணன், தொழிற் சங்கத் தோழர் முருகேசன், ம. சி. கிருட்டின மூர்த்தி (தமிழரசுக் கழகம்) ஆகியோர் ஊர்வலத்தின் முன்னே நடந்துவந்தனர்.

ஊர்வலம் கிட்டத்தட்ட பத்து மைல் தொலைவு கடந்து ஐ. ஜி. அலுவலக எதிரிலுள்ள கடற்கரை மணற்பரப்பை அடைந்தது.

பொதுக்கூட்டம்

அங்கு கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கி நடைபெற்றது.

ஊர்வலத்தில் சிறந்த முறையில் ஊர்திகள் அலங்கரித்து வந்தவர்களுக்கு அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பரிசுகள் வழங்கினுர்.

அமைச்சர் நெடுஞ்செழியன், மேயர் அபிபுல்லா பேக், முன்னுள் மேயர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, ம. சி. கிருஷ்ணமூர்த்தி, வி. பி. சிந்தன், கே. டி. கே. தங்கமணி, ஆ. வா. இ. ராவ் ஆகியோர் பேசினர்.

எம். பி.--க்களைப் பாதுகாக்க நாய்கூட இல்லையாம்!

துப்பாக்கி வேண்டுமென உறுப்பினர் கோரிக்கை

'என் பெயரை இழுக்காதீர்' என்கிருர் அவைத் தலைவர்

புதுடில்லி, மே 3—

"தங்கள் பாதுகாப்புக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துப்பாக்கிகள் வழங்கப்பட வேண்டும்; அமைச்சர்களுக்கு ஆயுதம் தரித்த காவலாளிகள் பாதுகாப்பு அளிக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்க நாய்கூட இல்லை"

என்று மக்களவையில், [illegible]ர்வா என்ற உறுப்பினர் கூறினுர்.

"அவைத் தலைவரும், நாடாளுமன்றத் துறை அமைச்சரும் விரும்பினுல், இதுபற்றி உள்துறை இலாகாவுடன் என்னுடைய இலாகா பரிசீலனை செய்யும்" என்று பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் கூறினுர்.

"இப்பிரச்சினையில், அவைத் தலைவரை இழுக்கவேண்டாம்" என்று, அவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி கூறினுர்.

நாகர்கோயில் கழகத் தோழர்கட்கு:

நாகர்கோயில் நகர தி. மு. க. பொறுப்பாளர் என். கோபால கிருட்டினன் அறிவிப்பதாவது:-

"தலைமைக் கழகத்தின் ஆணைப்படி தி. மு. க கிளைத் தேர்தல்கள் மே திங்கள் 4, 5 ஆகிய நாட்களில் நடைபெறவிருப்பதால், நாகர்கோயில் நகரப் பகுதியில் புதிதாக உறுப்பினர் சேர்த்து அமைக்க இருக்கும் வார்டு (நகர உட்கிளை) கழகங்களில், சம்பந்தப்பட்ட தோழர்கள் புதிய வார்டு கமிட்டி தேர்தல் நடத்த ஆணையாளர் நிர்ணயிக்க வேண்டியதிருப்பதாலும், இடம் -- காலம் குறிப்பிட வசதியாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரடி தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறேன்."

முகவரி:—என். கோபாலகிருட்டினன், நகர தி. மு. க. பொறுப்பாளர், ஒழுகிணசேரி, நாகர்கோயில்.

கோ. சி. மணி

நிகழ்ச்சிகள்

மே 3: அதிராம்பட்டினம்; 4: நெய்க்குப்பை; 5: தஞ்சை; 6: திருச்சேறை; 7: திருமங்கலக்குடி; 8: திருவையாறு; 9: குன்னம்; 10: கொக்கூர்; 11: இளங்காரங்குடி; 13; செம்பனூர் கோவில்; 14: தென்னம்பலம்; 15: சென்னை; 16: சித்தமல்லி; 17: கல்லூர், காட்டூர்; 18: மதுக்கூர்; 19: திருச்சி; 22 முதல் 24 வரை: உதகை; 26: வலங்கைமான்; 27: பூங்குடி.

படியுங்கள்!
ஹோம் ரூல்
(தி.மு.க. ஆங்கில வார இதழ்) நிறுவனர்: C.N. அண்ணுதுரை, M.A.

ஞாயிறுதோறும் வெளிவருகிறது.
விலை 20 காசு
OFFICE:- 9, AVENUE ROAD, MADRAS-34.

அறிஞர் அண்ணு அவர்களின்
அமெரிக்கச் சுற்றுப்பயண சிறப்பிதழாக
5—5—68 அன்று வெளிவருகிறது.
உங்கள் பிரதிக்கு உள்ளூர் விற்பனையாளரிடம் சொல்லிவையுங்கள்

மத்திய அமைச்சரவை மீது மகாராஜாக்கள் நிர்ப்பந்தம் ?

அளிக்கப்படும் மானியம் நீடிக்கப்படும் விசித்திரம்

மன்னர்களுக்கு மானியம் அளிப்பது நீடித்துச் செல்வது குறித்து நாடாளுமன்ற மேலவையில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'மன்னர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு முடிவு காண்பதில் காலம் கடத்தப்படுகிறது' என்று சுட்டிக்காட்டப்பட்டது.

"அமைச்சரவையிலுள்ள இராஜாக்களும் மகாராஜாக்களும், மானியத்தின் மீதான முடிவை அமுல் நடத்தாமலிருக்கும்படி செய்ய நிர்ப்பந்தம் கொண்டுவருகிருர்களா ?" என்றும் உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

"ஓராண்டு தாமதித்தால் ரூ 4.50 கோடி நட்டமாகிறது; 'உள்துறை அமைச்சர், வேண்டுமென்றே தாமதம் செய்கிருர்' என்ற குற்றச்சாட்டுக்கு சவாண் இடம் தருகிருர்" என்று பூபேஷ் குப்தா சுட்டிக்காட்டினுர்.

உள்துறை அமைச்சர் சவாண் பதிலளிக்கையில், இப்பிரச்சினை மீது அமைச்சரவையில் கருத்து வேறுபாடு இருப்பதாகக் கூறப்படுவதை மறுத்தார்; 'உள்துறை அமைச்சர் நிர்ப்பந்திக்கப்படவில்லை' என்றும் கூறினுர்.

தொழிலாளர்களின் நீண்ட நாள் கனவு நனவாகிறது!

சென்னை, மே. 8—

சென்னைத் துறைமுகத்தில் பணியாற்றும் 3,000 தொழிலாளர்கள், அன்ருடக் கூலி முறையிலிருந்து நீக்கப்பட்டு, துறைமுகத் தொழிலாளர் போர்டின்கீழ் உள்ள நிர்வாக அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதன் மூலம் அவர்களின் நீண்ட நாள் கனவு நனவாகி இருக்கிறது.

புதிய திட்டத்தின்கீழ் அவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளும், பிராவிடண்ட் நிதி போன்ற வசதிகளும் கிடைக்கும்.

ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் 12 நாட்களுக்கான வேலை ஊதிய உத்தரவாதம்—விடுமுறை நாட்களில் ஊதியம்-பிராவிடண்ட் நிதி-சிராசுடி ஆகியவை, இந்தப் புதிய திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

இந்தி ஆசிரியர்களுக்காகத் தமிழக அரசு செலவிட்ட பணம்

மானியமாகக் கொடுக்க மத்திய அரசிடம் கோரிக்கை

புதுடில்லி, மே. 1—

"இந்தி ஆசிரியர்கட்கு மத்திய அரசு உதவியளிக்கும் திட்டத்தின்கீழ் 1967-68-ஆம் ஆண்டிற்கு ரூ. 1,80,500 மானியம் அளிக்குமாறு தமிழக அரசு கேட்டிருக்கிறது; தகுந்த முறையில் பரிசீலித்த பிறகு இம்மானியம் அனுமதிக்கப்படும்"

என்று மத்திய துணைக் கல்வி அமைச்சர் பேராசிரியர் சிங், நாடாளுமன்ற மேலவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, இந்தி கற்பிப்பதை நிறுத்திவிடுமாறு சனவரி 24-ம் நாள் தமிழக அரசு ஆணைபிறப்பித்தது. 1966-67, 1967-68 ஆகிய ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட 120 இந்தி ஆசிரியர்களைத் தொடர்ந்து வேலைக்கு வைத்துக் கொண்டதற்காக 1967-68ல் ரூ. 1,80,500 செலவு ஏற்பட்டதாகவும் இத்தொகையை மானியமாக அளிக்கும் படியும் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது.

மத்திய அரசின் அலங்கோல நிலை

காங்கிரசு உறுப்பினரே அம்பலப்படுத்துகிருர்

புதுடில்லி, மே 1

"அரசின் சொல்லுக்கும் -- செயலுக்குமிடையே பெரும் வேறுபாடு நிலவிவருகிறது.

"சோஷலிசத் திட்டத்தை அமுல் நடத்தவேண்டும்; அல்லது. 'எங்களுக்கு முதலாளித்துவ வாழ்க்கை முறையில்தான் நம்பிக்கை' என்ருவது தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். 'இரண்டும் கெட்டான்' கொள்கையால், நாட்டிற்குத்தான் பாதகம் ஏற்படுகிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், காங்கிரசுப் பெண் உறுப்பினரான சாந்தா வாசிஷ்ட் என்பவர் சுட்டிக்காட்டி விளக்கினுர். மேலும் அவர், சில மத்திய அமைச்சர்களின் நடைமுறை பற்றிப் புகார் செய்து, அவையினரை வியப்பில் ஆழ்த்தினுர். அவர் அது பற்றிக் கூறியதாவது :-

"சில மத்திய அமைச்சர்கள், தங்கள் சொந்தக் கட்சிக்கு எதிராகவேகூட வேலை செய்துவருகின்றனர்; அமைச்சரவையிலுள்ள தங்கள் சகாக்களுக்கு எதிராக முணுமுணுப்புப் பிரசாரம்—பத்திரிகையாளரிடம் அவர்களுக்குள்ள செல்வாக்கைக்கொண்டு— செய்துவருகின்றனர்!"

இவ்வாறெல்லாம் செய்யும் அமைச்சர்களின் பெயர்களைத் தெரிவிக்குமாறு சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கோரினர்.

பெயர்களைத் தெரிவிக்க மறுத்துவிட்ட திருமதி சாந்தா வசிஷ்ட், 'அமைச்சரவையில் அவர்கள், முக்கியமானவர்கள்; அவர்களே இப்படியெல்லாம் செய்வது வேதனையை அளிக்கிறது' எனக் குறிப்பிட்டார்.

அறிக்கை கிடைத்த பின்னர்தான் நடவடிக்கையாம்

சேதுக் கடல் திட்டம்பற்றி மத்திய அரசு

புதுடில்லி, மே. 2—
"சேதுக் கடல் திட்டம் பற்றிய ஆய்வு அறிக்கை வந்து சேர்த்த பின்னர்தான், அதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்; ஆய்வு அறிக்கை விரைவிலேயே கிடைக்கும்"

என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ், நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

புதுவையில் உருவாகும் ஆரோவில் நகரம்

மாநிலங்களவையில் உறுப்பினர்கள் அச்சம்

'உளவாளிகள் சதிவேலை செய்பவர்கள் நகராகிவிடும்' என எச்சரிக்கை

புதுடில்லி, மே 3—
"புதுவையில் அமைக்கப்படும் 'ஆரோவில் நகரம்' அயல் நாடுகள்மீது பற்று உள்ளவர்களின் நகரமாகிவிடும்; மேலும் அது, உளவாளிகள், சதிவேலை செய்பவர்களின் கூடாரமாகிவிடும்"

என்று, நாடாளுமன்ற மேலவையில், உறுப்பினர்கள் சிலர் எச்சரித்துள்ளனர்.

"ஆரோவில் நகர திட்டத்துக்காக ரூ 500 கோடிவரை செலவிடப்படவிருக்கிறது; அரவிந்தர் ஆசிரமம் தேர்ந்தெடுக்கும் 50,000 பேர் அங்கு குடியமர்த்தப்படவிருக்கின்றனர்; நமது போலீசார் கூட அங்கு நுழைய முடியாத நிலை ஏற்பட்டுவிடும்" என்று ஏ.டி.மணி அச்சம் தெரிவித்தார்.

"உளவாளிகள், நாசவேலை செய்பவர்களுக்காகவே 'ஆரோவில்' அமைக்கப்படுகிறது" என இடதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர் ஏ. பி. சட்டர்ஜி கூறியபோது, உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்; 'திரு. சட்டர்ஜி, சீன ஏஜெண்டு' என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

"'சீன ஏஜெண்டு' எனக் கூறுவது, நாடாளுமன்ற மரபுக்குரிய வார்த்தைதானா?" என்று காங்கிரசு உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

"சீன ஏஜெண்டு—சி. ஐ. ஏ. ஏஜெண்டு என்பன போன்ற வார்த்தைகளை, உறுப்பினர்கள் தவிர்ப்பது நல்லது" என்று அவைத் தலைவர் வி. வி. கிரி கூறினார்.

"ஆரோவில் நகரம் அமைக்கப்படுவதால், நாட்டின் அடிப்படை உரிமை பாதிக்கப்படமாட்டாது; இந்தியாவின் அதிகார வரம்புக்குள்தான் அது இருக்கும்; வெளிநாட்டுப் பற்றுள்ளவர்களின் நகரமாக அது ஆகிவிடாது" என்று கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென் கூறினார்.

வந்ததெல்லாம் பெறும் திருப்பதி உண்டியல்!

திருப்பதி கோயில் உண்டியலில் ரூ. 1 இலட்சத்துக்கு மேல் விலை மதிப்புள்ள சுமார் 5½ கிலோ எடைக்குத் தங்க நகைகள் அடங்கிய பொட்டலம் ஒன்று இருந்ததாக திருப்பதி தேவஸ்தான போர்டு தலைவர் திரு. அப்பாராவ் அறிவித்தார்.

"இதுவரை இவ்வளவு மதிப்புள்ளதாகப் ஒரே தடவையில் யாரும் உண்டியலில் போட்டதில்லை" என்றும் அவர் கூறினார்.

"முன்பு ஒரு முறை ரூ. 1 இலட்சம் மதிப்புக்கு ரூபாய் நோட்டுக் கத்தைகளை ஒரே நபர் உண்டியலில் போட்டிருந்தார்" என்றும் அவர் தெரிவித்தார்.

இப்படிப் பணநோட்டுக் கத்தையாகவும், தங்க நகைப் பொட்டலமாகவும் உண்டியலில் போட்டவர்கள் யார்—அவர்களுக்கு அவை எப்படிக் கிடைத்தன—எதற்காகப் போட்டார்கள் என்ற விவரம் யாருக்கும் தெரியாது.

ஆந்திரத்தில் கழக முழக்கம்

விஜயவாடா, ஏப். 30—
ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விஜயவாடா நகரில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

வருகிற 5-5-68 மாலை 6-மணிக்கு விஜயவாடா காந்தி நகர் நியூ இண்டியா ஓட்டல் சென்டரில் இந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும்; திரு. திருப்புரனேரி வெங்கடேசுவர ராவ் தலைமை வகிக்கிறார்.

தோழர்கள் ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ.,எம்.எல்.சி., வேலூர் டி. நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி., முன்னாள் சென்னை மேயர் அ. பொ. அரசு எம்.எல்.ஏ., சி. சுப்பையா, இராமகிருஷ்ண வெள்ளத்தூர் எம்.ஏ., பி.இ.டி. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

விஜயவாடா நகர தி. மு. க. செயலாளர் சி. எஸ். எம். நாயுடு இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் இக்கூட்டம் பற்றிய விளம்பர அறிக்கைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன; நகரில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

கழகப் பொதுக்கூட்டத்தில் பெருவாரியான ஆந்திரர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பல ஆந்திரர்கள் இப்போது கழகத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டி ஒத்துழைப்பும் அளித்து வருகின்றனர்.

ஏற்கனவே சில திங்களுக்குமுன், முதலமைச்சர் அண்ணா அவர் அவர்கள் தெனாலிக்கு வந்திருந்த போது, விஜயவாடாவுக்கும் வந்து, நகர தி. மு. க. அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு சொற்பொழிவாற்றிச் சென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் ஊழியர்-மாணவர் மோதல் வழக்கு

ஜூன் முதல் நாள் வரை ஒத்திவைப்பு

சென்னை, மே. 2—
சென்னையில் மாணவர்கள்—பஸ் ஊழியர்களிடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக, மாணவர்கள், பஸ் ஊழியர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை மூன்று மாத காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று பிராசிகியூஷன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, தலைமை மாகாணமாஜிஸ்திரேட் திரு. பலராமையா தள்ளுபடி செய்தார்; ஆனால், பரீட்சை எழுதும் மாணவர்கள், சாட்சியமளிக்க வருவதற்கு வசதியாக வழக்கு விசாரணையை ஜூன் முதல் நாளுக்கு ஒத்திவைத்தார்.

"நீதி விசாரணைக் குழுவின்முன் விசாரணை நடந்து முடியும் வரையில் வழக்கை ஒத்திவைக்க வேண்டும்" என்று மனுவில் தெரிவிக்கப்பட்டதாக மாஜிஸ்திரேட் கூறினார்.

"நியாயமான--போதிய காரணங்கள் இருந்தால்தான், வழக்கை நீதிமன்றம் ஒத்திவைக்க முடியும்" என்றார்.

நகராட்சியின் சொத்துக்கள்

அரசு அனுமதியின்றி விற்பதற்குத் தடை

சென்னை, ஏப். 30—
"அரசின் முன் அனுமதியின்றி தனக்குச் சொந்தமான சொத்துக்களை நகராட்சி மன்றங்கள், குத்தகைக்கு விடுவதைத் தவிர விற்பனை செய்யவோ அல்லது அதை அனுமதிக்கவோ கூடாது" என்று அரசு அறிவித்துள்ளது.

"அரசின் முன்னனுமதியின்றி அத்தகைய சொத்துக்கள்மீது பங்தகத்தை அனுமதிக்கலாகாது" என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடக்க இருப்பவை

5--5--68

இராமநாதபுரம்
நாவலர் படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு வெளிப் பட்டணத்தில்; தலைவர்: கே. அகமது எம்.சி.; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., டி. தங்கப்பன் எம். எல். ஏ., அப்துல் ரகுமான், எம். முருகேசன்.

காரைக்குடி
நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: மு. சொக்கநாதன்; பேசுவோர்: ஆ. துரையரசன் எம்.எல்.ஏ., எஸ். எஸ். தென்னரசு, பி. திருஞானம் எம்.எல்.சி., வே. தங்கபாண்டியன் எம்.எல்.சி., பெரி. அழகு, அ. நடராசன் எம்.சி, இரா. மெய்யப்பன், பொ. செங்குட்டுவன். (இரவு 9-30 மணிக்கு இசைக்குயில் யூ. ஆர். சீவரத்தினம் இசை நிகழ்ச்சி நடைபெறும்.)

பள்ளிப்பாளையம்
எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு ஆர். கே. திடலில்; தலைவர்: இரா. தியாகராசன் பி.காம்.; பேசுவோர்: மு. இராமநாதன், டி. ஏ. இராசவேலு எம்.எல்.ஏ,, ப. சுப்பிரமணியம், இரா, சிந்தனையாளன், கே. எம். பழனியப்பன்.

சிதம்பரம்
கொடை வள்ளல் மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு ஆனந்தராயர் தெருவில்; தலைவர்: ந. கண்ணையன்; பேசுவோர்: மு. இயலரசன்: மன்றத் திறப்பாளர்: பொன். சொக்கலிங்கம்; கொடியேற்றுபவர்: ப. நடேசன்; பேசுவோர்: புலவர் கூ. ஆறுமுகம், வழக்கறிஞர் இரா. பொன்னம்பலம், வீரமணி, ந. கலியபெருமாள், கு. பாலு, மு. மாரியப்பன், ப. சபாநாயகம், த. தேவநாதன், சா. இராமலிங்கம்.

குமாரபாளையம்
எம்.ஜி ஆர். ரசிகர் மன்ற முதலாண்டு விழா; மாலை 6 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்; பேசுவோர்: கேரள சுந்தரம், எல். கே. ஜி. தனக்கோடி, தி. மு. சண்முகம், பி. இரஞ்சிதமணி பி.காம்., வி. ச. கனகராசன்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

மே 7: ஆலந்தூர்; 9: தத்தநேரி; 10: லால்குடி; 11: தாத்தய்யங்கார்பேட்டை; 13: தர்மபுரி; 17: பார்த்திபனூர்: 18: திருப்பரங்குன்றம்; 19: பரவை; 22: இராசிபுரம்; 26: சிதம்பரம்.

மாநில அரசைக் கவிழ்க்கும் முயற்சியில்.....

'உணவுப் பிரச்சினையை ஆயுதமாகக் கையாளுகிறது டில்லி'

கேரள முதலமைச்சரின் கடும் குற்றச்சாட்டு

கோழிக்கோடு, மே 3—
"'கேரளத்தில் போதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்' என்ற மாநில மக்களின் நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்கவில்லையென்றால், மாநில அரசுக்கும்—மத்திய அரசுக்குமிடையே 'மோதுதல்' ஏற்பட்டே தீரும்"

என்று, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறியதாவது:—

"கேரளத்துக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன; அவற்றில் மிக முக்கியமான—அவசரமான பிரச்சினை, உணவுப் பிரச்சினைதான்.

"மாநிலத்தில், கூட்டணி, ஆட்சிக்கு வந்தது முதல், போதிய உணவுத் தானியங்களைத் தருவதற்கு மத்திய அரசு மறுக்கிறது.

"மாநில அரசைக் கவிழ்க்கும் முயற்சியில், உணவுப் பிரச்சினையைத் தனது ஆயுதமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறது மத்திய அரசு! கூட்டணி அரசில் இடதுசாரி கம்யூனிஸ்டு முக்கியக் கட்சியாகச் செயல்படுவதே இதற்குக் காரணமாகும்."

திருச்சியில் பாவேந்தர் விழா

பாவேந்தர் பாரதிதாசன் நினைவு விழா 5—5—68 மாலை 3-30 மணிக்கு திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்; திரு கு. விசுவநாதன் எம்.ஏ. தலைமையில், திரு. எம். எஸ். மணி எம்.எல்.ஏ. சொற்பொழிவாற்றுவார்; பாவேந்தரின் மகன் திரு. சு. மன்னர்மன்னனுக்குப் பாராட்டு அளிக்கப்[illegible]ம்.

மாலை 4-30 மணிக்கு பேராசிரியர் எம். எஸ். நாடார் தலைமையில் காலத்தரங்கசமும், மாலை 6-30 மணிக்கு பேராசிரியர் க. செல்லப்பன் எம்.ஏ. தலைமையில் பட்டிமன்றமும் நடைபெறும்.

சென்னை 7-வது வட்ட தோழர்கட்கு:

"சென்னை 7-வது வட்டத்தில் 1965 முதல் 1968-வரையில் சேர்ந்துள்ள தலைமைக் கழக உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய தலைமைக் கழகப் பட்டியல், 'கிளி மார்க்' பட்டணம் பொடிக் கடையில் (கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக எதிரில்) பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது; உறுப்பினர்கள் தங்கள் பெயர் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளலாம்"

என்று, வட்டச் செயலாளர் மு. பாண்டியன் அறிவிக்கிறார்.

ஹாவாய் மரபுப்படி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிறந்த உள்ளங்களோடு உறவாடுகின்றன!

1960-ம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது இந்த நிலையம். 1959 ல் அமெரிக்க செனட் சபையில் பெரும்பான்மைக் கட்சித் தலைவராக லிண்டன் பி ஜான்சன் இருந்தபோது, அவர் தெரிவித்த யோசனையின் பேரில் பிறந்தது இந்த நிலையம்.

ஜப்பானின் அன்பளிப்பு அது!

ஹாவாய் பல்கலைக் கழகத்து வளைவுக்குள் 21 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது இந்த நிலையம். இதற்கு வடிவமைப்புத் தந்தவர் உலகப் புகழ்பெற்ற சட்டடக் கலைஞரான ஐ. எம். பெயி; நியூயார்க் நகரைச் சேர்ந்தவர்.

நிலையத்தின் ஒரு சிறப்பு, அதில் இருக்கும் ஜப்பானியத் தோட்டமாகும். ஜப்பானின் அன்பளிப்பு அது. அங்கு ஓடும் சிற்றாறு 'இநதயர்துக்த' — ஜப்பானிய மொழியில இருக்கும் வரி வடிவம் போன்று அமைக்கப்பட்டுள்ளது இருதயம், ஜப்பானிய மக்களின் நட்பைக் குறிக்கிறது.

நிலையத்தின் திட்டத்தில் ஏறத்தாழ 3,000 மக்கள் கலந்து கொள்கின்றனர். பலர் தம் சொந்த ஊருக்குத் திரும்பியதும் தாம் கற்றதைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர்.

ஹாவாயின் சிறப்பு

ஹாவாய் மாநிலம், பசிபிக் பெருங்கடலில் சங்கிலித் தொடர்போல் இருக்கும் பலப்பல தீவுகளைக் கொண்டது. வெப்ப மண்டலத்தில், அமெரிக்கப் பெரு நிலத்துக்கு 2,000 கடல் மைல் (ஒரு கடல் மைல் 1.152 நில மைல்) தென் மேற்கில் இருக்கிறது.

தீவுகளும் மொத்தம் 1,500 மைல் நீளத்திற்குப் பரந்து கிடக்கின்றன. மிகப் பெரிய தீவு ஹாவாய்; மிகச் சிறிய தீவு குரே; மொத்தப் பரப்பு 6,423 சதுர மைல்.

உலக மக்களுக்கு விடுமுறை மாநிலமாகத் திகழ்கிறது ஹாவாய். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் இந்தத் தீவுகளுக்கு வருகின்றனர்.

'வைக்கிக்கி' என்ற கடற்கரை, ஹாவாயின் பெரும் புகழ்பெற்ற கடற்கரைகளில் ஒன்று. இங்கு ஆண்டு முழுவதும் பயணிகள் வந்தவண்ணமிருக்கின்றனர். பலப் பல விளையாட்டுகளுக்கு இங்கு வசதி உள்ளது.

பல இனத்தவர்கள் ஒன்று சேர்ந்துள்ள இடம் ஹாவாய். அனைத்துலக சகோதரத்துவ உணர்வு இந்தத் தீவுகளிலே மேலோங்கி இருக்கிறது. பெரும்பான்மை மக்கள் ஆசிய இனத்தவர்களே யாவர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிரியர்கள்—காமிராவைப் பிடித்த வண்ணம் நிருபர்கள்!

"ஏறுகொண்ட நடையுடன்--பீடுகொண்ட பார்வையுடன் —அகன்ற மீசை, அகல வெள்ளைப் பற்கள் முறுவலிக்கக் கைகூப்பி வருகிறார் ஒருவர்!

"'அண்ணா, அண்ணா; அதோ பாருங்கள்—வருகிறார்' என்று பேசும் குரல்கள், அவர் வரும் திசையை நோக்கின! பூமாலை போடுகிறார்கள்! அவர்கள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

"'அண்ணா என்றசொல், ஒரு மந்திர வார்த்தை' என்கிறார் ஒரு தமிழர்—அருகிலுள்ள வெள்ளைக்காரரிடம்; 'நான் நம்புகிறேன்' என்கிறார் வெள்ளைக்காரர்!

"புடவையணிந்து நிற்கும் சில அமெரிக்கப் பெண்மணிகள், நம் கவனத்தைக் கவருகின்றனர்! தாடி அணிந்து முண்டாசு கட்டியிருக்கும் சிங்குகள் சிலர் ஆவலுடன் நோக்குகின்றனர்! அண்ணாதுரையைக் கண்டதும், அந்தக் கூட்டத்திலே ஓர் அலை--ஒரு துடிதுடிப்பு--ஒரு பிரகாசம்—ஒரு மகிழ்ச்சி! ஆர்வத்தை வெளியிட முடியாமல் நிற்கும் நிலை!

"அண்ணா, பலருடன் கைகுலுக்குகிறார்—'நலமா?' என்ற அன்பு மொழி! அவசரமாக விமான நிலையத்தில் தங்கள் அலுவல்களைப் பார்க்கப் போகிற அந்நியர்கள்கூட ஒருகணம் நிற்கிறார்கள்—'என்ன இங்கே கூட்டம்; இந்தியாவின் 'பெரிய மனிதரோ?' என்று கேட்கின்றனர்; 'ஆம்; நேருவின் பேச்சுக்கு அடுத்தபடியாகப் பெரும் கூட்டங்களை ஈர்க்கும் தென்னிந்தியாவின் தலைவர்' என்ற பதில்; 'யு மீன், சௌத் இண்டியா?' என்ற கேள்வி; 'எஸ்; மெட்ராஸ்' என்ற பதில்!"

—'ஆனந்தவிகடன்' சிறப்புக் கட்டுரையில்
எம். எஸ். உதயமூர்த்தி

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.